செ. கு. எண்: 328 நாள் : 15.12.2013

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 15.12.2013

வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், பேரணாம்பட்டு கிராமம் அருகே 25.11.2013 அன்று மண் அள்ளும் பணியை மேற்கொண்டிருந்த போது மண் சரிந்து விழுந்ததில் பேரணாம்பட்டு கிராமத்தைச் சேர்ந்த திரு. மணி என்பவரின் மகன் நாகராஜ், திரு. சின்னதம்பி என்பவரின் மகன் பிரசாத் மற்றும் திரு. கிருஷ்ணமூர்த்தி என்பவரின் மகன் விஜயகுமார் ஆகியோர் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கம்பம் நகரைச் சேர்ந்த திரு. கண்ணன் என்பவரின் மகன் மணிகண்டன் 25.11.2013 அன்று மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைக்க தோண்டப்பட்டிருந்த பள்ளத்தில் தேங்கியிருந்த மழை நீரில் தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரமடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்த நாகராஜ், பிரசாத் விஜயகுமார் மற்றும் மணிகண்டன் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9